සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2025
இறுதி தவணைப் பரீட்சை - 2025 / Year End Term Test - 2025

ශ්‍රේණිය தரம் Grade	11	தமிழ் இலக்கிய நயம் I,II Appreciation of Tamil Literary Text I,II	කාලය நேரம் Time	03 மணித்தியாலம்

නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

பகுதி I — மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடங்கள்

- *முதலாம் வினா கட்டாயமானது.*
- *இரண்டாம் வினாவில் பாடற் பகுதி அல்லது உரைப்பகுதியில் ஏதேனும் ஒன்றுக்கு மாத்திரம் விடை எழுதுக.*

01 முதல் 05 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

(1) 'போர்க்களத்தில் பகைவரும் அஞ்சும் என் வலிமை இந்தப் பெண்ணின் வதன வனப்புக்குத் தோற்று அழிந்துவிட்டதே. 'ஓ' என அலறும் ஒரு போர் வீரனைக் காமத்துப்பாலில் காட்டுகிறார் திருவள்ளுவர்.

(அ). காமத்துப்பால் இடம்பெறும் இலக்கியம் யாது?

.....

(ஆ). வதன வனப்பு என்பதன் கருத்து யாது?

.....

(2) 'மொய்ம்பினோய்' சொன்ன எல்லையின் ஊங்கினும்
தூங்கினன்; மன்னன் வந்திலன்'

(அ). இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

.....

(ஆ). இங்கு 'மன்னன்' எனக் குறிப்பிடப்படுபவன் யாவன்?

.....

(3) முடியுடை வேந்தர்கள் அவர்களுக்கு வெண் சாமரம் வீசுவதைப் பார்க்கின்றேன். சிலம்பின் வென்ற சேயிழை என்றார்களே. சிலம்பு தெரியுமா? அந்தச் சேயிழையைத்தான் தெரியுமா?

(அ). இங்கு குறிப்பிடப்படும் 'சிலம்பின் வென்ற சேயிழை' யார்?

.....

(ஆ). முடியுடை வேந்தர்கள் யாவர்?

.....

.....

(4) 'இங்கே நான் மற்றவர்களுடன் கூட்டாக வாழ முயற்சித்துப் பார்க்கலாம். சிலவேளைகளில் சரிவரக்கூடும். அப்படி நடந்தால் எவ்வளவு நல்லது. எனக்கென்று ஒரு தீவை நான் உருவாக்கத் தேவையில்லை.

(அ). கதை சொல்லியின் தீவில் இருப்பவை எவை?

.....

(ஆ). இங்கு தீவு என்பதனூடாக ஆசிரியர் எதனைக் கூற முற்படுகின்றார்.

.....

(5) 'பகைவென்ற வீரனாய் தலைநீர் சொட்டச்சொட்ட
அப்பா மேல் வருவார். இன்றுவரை அம்மா
கதவுகளின் பின்னிருந்துதான் அப்பாவோடு பேசுகிறாள்...?

(அ). 'பகைவென்ற வீரனாய்' இங்கு வெளிப்படும் அணி யாது? விளக்குக.

.....

(ஆ). இங்கு ஆணாதிக்க வாதத்தை வெளிப்படுத்தி நிற்கும் வரிகளைக் குறிப்பிடுக.

..... (20 புள்ளிகள்)

Past Papers Wiki

01. பின்வரும் பாடற் பகுதியை அல்லது உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

பாடற் பகுதி

சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்
புனக்கிளி கடியும் பூங்கட் பேதை
தானறிந் தனளோ இலளோ பானாள்
பள்ளி யானையின் உயிர்த்தென்
உள்ளம் பின்னுந் தன்னுழை யதுவே
சிரல்வாய் வனப்பின வாகி நிரலொப்ப
ஈர்ந்தண் டளவந் தகைந்தன – சீர்த்தக்க
செல்வ மழைமதர்க்கட் சின்மொழிப் பேதையூர்
நல்விருந் தாக நமக்கு

(1) குறிஞ்சித் திணைக்குரிய பாடலில் தலைவனின் பிரிவாற்றாமை எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

.....

(2) இவ்விரு பாடல்களிலும் தலைவியின் அழகு எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

.....

(3) முல்லைத் திணைப் பாடலில் நாட்டு வளம் காட்டப்பட்டுள்ள விதத்தை எழுதுக.

.....

(4) பாடல்களில் காணப்படும் உவமை அணிகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக.

.....

(20 புள்ளிகள்)

அல்லது

உரைப் பகுதி

இத்தமிழருடைய புகழ்ப் பைத்தியம் மிகவும் அழகாக இருந்தது என்பதைக் காட்ட நூற்றுக்கணக்கான உதாரணங்கள் தர இயலும்.

'தோன்றிற் புகழோடு தோன்றுக; அ∴தி லார், தோன்றலில் தோன்றாமை நன்று' **(குறள், 236)**

என்று குறளாசிரியர் கட்டளை இடும் முன்பே இம்மக்கள் தம் வாணாளில் பெறவேண்டிய ஒரு குறிக்கோளாக இதனைக் கொண்டிருந்தனர் என்பதை நன்கு அறிய முடிகின்றது. இலக்கணமும் இதற்குப் பெரியதோர் இடந்தந்து, "பாடாண் திணை" என்றதொரு திணையையே வகுத்துவிட்டது.

மனிதனாகப் பிறந்தவன் புகழீட்டியே தீர வேண்டுமென்றால் அதற்குரிய வழிகள் யாவை எனக் கேட்கத் தோன்றுகின்றதல்லவா? வழிகள் பலவாக இருக்கலாம். எந்த வழியை மேற்கொண்டால் புகழ் பேசுகின்றவர்கள் எளிமையாகப் புகழ்வார்கள்? அந்த வழியே சிறந்த வழி என்று நினைத்திருத்தல் கூடும் அக்கால மக்கள். மேலும் புகழ் ஈட்டும் வழியைப்பெறச் செய்யக்கூடுமாயின் அது மிகவும் நலமானதாகப்பட்டிருக்கும். இயற்கையாக மனதில் தோன்றும் வெறுப்புணர்ச்சிக்கு வடிவு கொடுப்பதன் மூலம் இரண்டு பயன்கள் கிட்டுகின்றன. முதலாவது யாரை வெறுக்கின்றோமோ அவர் மேல் போர்தொடுத்து வெற்றி காணமுடிகின்றது. இரண்டாவது, அவ்வாறு பெறும் வெற்றியைப் பிறர் புகழவும் காரணமாகிறது.

இவ்வாறு இரண்டு வழிகளிற் பயன்பெறக் கூடுமாயின், வன்மை மிக்க அரசர்கள் "போர்" என்ற வழியை மேற்கொண்டதில் வியப்பிருத்தல் இயலாது. மேலும் அந்த அரசர்கள் புரியும் இந்தப் போர்களைத் தம்முடைய நாட்டு மக்களின் நலத்திற்காகவே செய்ததாவும் கூறினர்; அம்மக்களும் இதனை நம்பினர்.

பிறருடைய நாட்டின் மேல் போர் தொடுத்துச் செல்லுதல் அரசர்க்குரிய அறமாகவும் போற்றிக் கூறப்பெற்றது.

(1) தமிழர்கள் புகழ்மீது நாட்டம் கொள்ளக் காரணங்கள் எவை?

.....

(2) 'தோன்றின் புகழோடு தோன்றுக அ∴தி லார், தோன்றலில் தோன்றாமை நன்று' என்ற குறளின் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக.

.....

(3) இயற்கையாக மனதில் தோன்றும் வெறுப்புணர்ச்சியினால் ஏற்படும் விளைவுகள் யாவை?

.....

(4) வன்மை மிக்க அரசர்கள் 'போர்' என்ற வழியை மேற்கொள்ளக் காரணம் யாது?

.....

(20 புள்ளிகள்)

සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

பகுதி II

- *முதலாம் வினா கட்டாயமானது.*
- *ஏனைய 2, 3, 4, 5 ஆகிய வினாக்களிலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களை மாத்திரம் தெரிவு செய்து எழுதுக.*

1. பின்வரும் செய்யுள் பகுதியை வாசித்து, செய்யுளின் கீழ் தரப்பட்டுள்ள குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு 200 சொற்களுக்குக் குறையாமல் நயந்து எழுதுக.

காலையிலே பனி காயுமுன்னே குளிர்
காற்றை கிழித்துமே ஓடுகின்றோம்! – தொழிற்
சாலையிலே சங்கு ஊது முன்னே பசுந்
தங்கத் தளிரினை கிள்ளிடுவோம்!

வெண்டை விரல்கள் விறைத்திடினும் எங்கள்
மேனி குளிரில் நடுங்கிடினும், - இரு
கெண்டை விழிகள் பளபளக்கும், தளிர்
கிள்ளவோ கைகள் பரபரக்கும்!

கூடை அசைந்து பக்கத்திலும் வந்து
கூட்டும் 'கிறுக் கிறுக்' கோசையிலே – நெஞ்ச
மேடையிலே சதி ராடுமெண் ணங்களின்
வேதனை துன்ப ஒலிகேட்கும்!

பக்க நிரைச்செடி சிக்கிடும் போதிலும்
பக்குவ மாகவி லக்கிச் செல்வோம் - எம்மைச்
சிக்கவைத் திருக்கும் அடிமைத் தளையினை
தூக்கி யெறியத் துணிவு கொள்வோம்!

வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென
மேலுறும் எண்ணம் எங்கள் மனதில், - இனி
முட்டித் ததும்பி முளைத்து விடும் எம்மை
மூடிய பேரிருள் ஓட்டிடுவோம்!

என்றும் அடிமைச் சிறையினி லேவைத்த
எத்தர்கள் கொட்ட மடக்கிடவே பெருங்
குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு
கோதையர் போரிட முன்வருவோம்!

பெண்ணுக்கு கல்வி பெருந்தீது, உரிமை
பேசிடி லோஅது பெருந்தவறு, என்ற
எண்ணம் படைத்தவர் மண்ணிற் புதைந்திட
எண்ணற் கரிய கலைபடைப்போம்.

சாதிச் சமய சங்கறுத்து, பெண்கள்
தாழ்வுயெனும் தீய போக்கொழித்து; இம்
மேதினி யில்புது மாற்றம் படைத்து பெண்
விடுதலைக் கீதம் இசைத்திடுவோம்!

பெண்ணுக்கு இங்கோர் தனிநீதி - என
பேசிடும் நூல்கள் எவையெனினும் - அவை
மண்ணில் புதைத்து மகிழ்ந்திடுவோம் - நவ
மாதர் அறங்கள் படைத்திடுவோம்!

போலித் தலைமை பொசுக்கிடுவோம் - இவர்
பொய்மைத் திரையைக் கிழித்தெறிவோம்!
பாலித்திடுவோம் புதுயுகத்தை, மலைப்
பாவையர் வாழ்வில் உயர்ந்திடுவோம்!

(1) பாடலுக்குரிய பின்னணி

(2) மலையக தேயிலைத் தோட்ட மக்கள் உழைப்பில் கொண்ட ஆர்வம்

(3) அம்மக்களின் துன்பியல் வாழ்வு

(4) விடுதலை மீது கொண்டுள்ள மக்களது வேட்கை

(5) அணிச்சிறப்பு (6 x 5 = 30 புள்ளிகள்)

1. வாய்மொழிப் பாடல் என்ற பகுதியை மையமாகக் கொண்டு

(அ) குழந்தைக்கும் உறவுகளுக்குமிடையிலான பிணைப்பு

(ஆ) கிராமிய மண் வாசனை என்பன வெளிப்படுத்தப்படும் விதத்தினை விளக்குக. (15 புள்ளிகள்)

2. 'மின்மினிகளால் ஒரு தோரணம்' எனும் கட்டுரையில்,

(அ) சுஜாதாவின்

(ஆ) கவிக்கோ அப்துர் ரஹ்மானின் பார்வைகளில் 'ஹைக்கூ' கவிதைகள் பெறும் முக்கியத்துவத்தினை உதாரணம் காட்டி விளக்குக. (15 புள்ளிகள்)

3. 'பெண்ணின் அழகு'

(அ) நலம் புனைந்துரைத்தல்

(ஆ) விவேக சிந்தாமணிப் பாடல்கள் ஆகியவற்றில் எடுத்துரைக்கும் விதத்தினை தெளிவுபடுத்துக. (15 புள்ளிகள்)

4. 'தாய்ப் பசு' என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு,

(அ) மனிதர்களின் சுயநலப் போக்கு

(ஆ) ஜீவகாருண்யத்தின் தேவை என்பன வெளிப்படும் விதத்தினை விளக்குக. (15 புள்ளிகள்)

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank